# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 243—1976 දෙසැම්බර් 10 වැනි සිකුරාදා—1976.12.10

243 ம் இலக்கம்—1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II—சட்டசம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் .. .. .. | — | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் . . | — |
| சட்டமூலங்கள் .. | — | பிசுக்கால விற்பனைபற்றிய அறிவித்தல்கள் .. .. | — |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் .. | — | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் . .. | — |
| உச்சமன்ற அறிவித்தல்கள் .. | | சட்ட கல்விச் சபையின் அறிவித்தல்கள் . . | — |
| உச்சமன்ற குற்றவிசாரணைகள்பற்றிய அறிவித்தல்கள் .. | | நொத்தாரிசுமார் பட்டியல் .. | — |
| மாவட்ட மன்ற சிறிய மன்ற அறிவித்தல்கள் .. .. | 1/21 | நானாவித அறிவித்தல்கள் .. | — |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் .. | — | | |


**கவனிக்க.**—(i) கம்பஹா பௌத்த இளைஞர் கழகம் சட்டமூலம் 1976 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்குக் குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(ii) இவ்வர்த்தமானியோடு பிரசுரிக்கப்பட்ட பகுதி VI இல் யூரிமார், மதிப்பீட்டாளர் பட்டியல் அடங்கியுள்ளது.

## மாவட்ட மன்ற சிறிய மன்ற அறிவித்தல்கள்

1977 ஆம் ஆண்டு, கிரிந்த சுற்று நிருப நீதவான் நீதிமன்றம் கீழே தரப்பட்டுள்ள திகதிகளில் நடைபெறும் என்பதை பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| 1977.01.20 | 1977.07.21 |
| 1977,02.17 | 1977.08.18 |
| 1977.03.17 | 1977.09.22 |
| 1977.04.21 (*) | 1977.10.20 |
| 19;7.05.19 | 1977.11.17 |
| 1977.06.16 | 1977.12.15 |

(*) இந்த நாட்களில் நீதிமன்ற ஓய்வு நாட்களானபடியால் சுற்று நீதிமன்றம் நடைபெற மாட்டாது.

எச். டி. உபாலி,
நீதவான்,
மாத்தறை.

12-201—10.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 243

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**

**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1975 ம் ஆண்டு யூலை மீ 01 ந் உ.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1976 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் தேதிய

பகுதி II இற்குச் குறைநிரப்பி

(20.12.76 ஆந் தேதியன்று வெளியிடப்பட்டது)

# காலி சம்போதி சேமநலக் கழகம் (கூட்டிணைத்தல்)

காலி சம்போதி சேமநலக் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்.

அரசினர் ஆணைப்படி வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

## காலி சம்போதி சேமநலக் கழகம் (கூட்டிணைத்தல்)

### காலி சம்போதி சேமநலக் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

*முன்னுரை.*

“ காலி சம்போதி சேமநலக் கழகம் ” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுறக்கொண்டு நடாத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் எனக் காலியில் இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட கழகம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாகக் கொண்டுநடாத்தியும் நிறைவேற்றியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்திருப்பதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப்பெயர்.*

1. இச்சட்டம் 1976 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, காலி சம்போதி சேமநலக்கழக (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*காலி சம்போதி சேமநலக் கழகத்தைக் கூட்டிணைத்தல்.*

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் இதனகத்துப்பின்னர் “ கழகம் ” எனக் குறிப்பீடு செய்யப்படும் காலி சம்போதி சேமநலக் கழக உறுப்பினர்களாக இப்போதுள்ளவர்களும் அல்லது இதனால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும், “ காலி சம்போதி சேமநலக் கழகம் ” என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறு வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் “ கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்). அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுத்தல் வேண்டுமென்பதுடன் வழக்குத் தொடுக்கலாம் ; அதற்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் வழக்குத் தொடுக்கவும் படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் திருத்தவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் அது உடையது.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படும் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) உடற்குறைபாடுள்ளவர்களும், உளக்குறைபாடுள்ளவர்களுமான பிள்ளைகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கும் அவர்களுக்குப் புதுவாழ்வளிப்பதற்குமான மனைகளைப் பேணி வருதல் ;

(ஆ) கதியற்ற வயது முதிர்ந்தோருக்கான மனைகளைப் பேணி வருதல் ;

(இ) அநாதைகளான, கைவிடப்பட்ட, கதியற்ற பிள்ளைகளுக்குப் புதுவாழ்வளிப்பதற்கான மனைகளைப் பேணி வருதல் ;

(ஈ) இலவச மருந்துச்சாலைகளைப் பேணி வருதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் மனைகளில் வைக்கப்பட்டவர்களும், உளக் குறைபாடுடையவர்களும், உடற்குடைபாடுடையவர் களுமான பிள்ளைகளுக்குப் பொருத்தமான கல்வி புகட்டு வதற்கான கல்வி நிறுவனங்களைத் தாபித்தலும் நிரு வகித்தலும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.*

4. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான, அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன் மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங் களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும் நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத் துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவு றுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பில்லாமல் பணம் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டு தற்கும், கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுதற்கும் அல் லது சேகரித்தற்கும், அதன் நிதிகளை முதலீடுசெய்தற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த் தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

*நிறைவேற்றுக் குழு.*

5. (1) அப்போதைக்கு வலுவுள்ளனவாயிருக்கும் கூட்டுத் தாபன விதிகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட் டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவுள்ளனவாயிருக்கும் விதி களுக்கிணங்கத் தெரிவுசெய்யப்படும் கூட்டுத்தாபன ஆதரவாளர் கள், தலைவர், துணைத்தலைவர் மூவர், பொதுச்செயலாளர், பொரு ளாளர், உதவிச் செயலாளர் என்போரையும், அத்தகைய எண் ணிக்கையினரான ஏனையோர்களையும் கொண்ட நிறைவேற்றுக் குழு வால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழு இச் சட்டம் தொடங்கும் தேதியன்று பதவி வகிக்கும் ஆதரவாளர் கள், தலைவர், துணைத்தலைவர்கள், பொதுச்செயலாளர், பொரு ளாளர், உதவிச்செயலாளர், கழகக் குழுவின் ஏனைய உறுப்பினர் என்போரைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்.

*நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபை.*

6. (1) கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்க, விடயத்துக்கேற்ப, தெரிவுசெய்யப்படவேண்டிய அல்லது நியமிக்கப்படவேண்டிய அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களைக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையொன்று இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப் பொறுப் பாளர்கள் சபை இச்சட்டம் தொடங்கும் தேதியன்று பதவி வகிக் கும் கழகத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் சபையாதல் வேண் டும்.

ஆளுநர் சபை.

7. (1) பின்வருவோரைக் கொண்டமைந்த ஆளுநர் சபை ஒன்றிருத்தல் வேண்டும் ; அவர்கள்—

(அ) கூட்டுத்தாபனத் தலைவர் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினால் அவர்களிலிருந்து பெயர்குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இருவர் ;

(இ) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுத்தாபன உறுப்பினர்கள் இருவர் ;

என்போராவர்.

(2) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபைச் செயலாளர் ஆளுநர்சபைச் செயலாளராகவிருத்தல் வேண்டும்.

(3) ஓராயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட எச் செலவேனும், குத்தகைக்கெடுத்தல், வாடகைக்கெடுத்தல், வாடகைக்குக் கொடுத்தல் ஈடுவைத்தல், விற்றல், கொள்வனசெய்தல், நன்கொடையளித்தல் அல்லது வேறுவகையில் ஆதனம் எதனையும் கையளித்தல் எதுவேனும், அத்தகைய செலவு அல்லது கையளிப்பு ஆளுநர் சபையின் முன்னங்கீகாரம் பெற்றிருந்தாலன்றி, செல்லுபடியான தாகாது.

(4) கூட்டுத்தாபனத்தின் சார்பில் கடன்பெறுவதற்கு நிறைவேற்றுக் குழுவுக்குள்ள தத்துவத்தை அது ஆளுநர்சபையின் முன்னங்கீகாரம் பெற்றிருந்தாலன்றிப் பிரயோகிக்கத்தலாகாது.

(5) கூட்டுத்தாபனத்தின் முதலாவது ஆளுநர்சபை, இச்சட்டம் தொடங்கும் தேதியில் பதவிவகிக்கும் கழகத்தின் ஆளுநர் சபையாகவிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபன விதிகள்.

8. (1) உறுப்பினரின் பொதுக்கூட்டமெதிலும் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் என்பவற்றுக்கும், நிறைவேற்றுக் குழுவினதும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினதும், ஆளுநர் சபையினதும், கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர், முகவர், சேவையாளர் என்போரினதும் கடமைகளைப் புரிதல், கொடுக்கல் வாங்கல்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை, அத்துடன் வேறுவகையில் பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் எனக்காலத்துக்குக் காலம் விதிகளையாக்குதல் கூட்டுத்தாதபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டபோது அதே விதமான கூட்டத்தில், ஆயின், (2) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைய, மாற்றப்படலாம், திருத்தப்படலாம், அல்லது நீக்கப்படலாம், அல்லது அவற்றுக்கு எதுவும், சேர்க்கப்படலாம்.

(2) அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபன விதியெதுவும் அல்லது இதன்பின்னர் நிறைவேற்றப்படக்கூடிய ஏதேனும் விதி, கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினரின் வாக்குக் கொண்டன்றி மாற்றப்படவோ, திருத்தப்படவோ, நீக்கப்படவோ, அதற்கெதுவும் சேர்க்கப்படவோ ஆகாது.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று வலுவிலுள்ள கழகத்தின் விதிகள் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகளாகக் கருதப்படல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்திடமிருந்து செலுத்தப்படுவனவும் அதற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடனகள்.

**9.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் நேரத்தில் கழகத்துக்கு இருந்துவந்த எல்லாக் கடன்களும் பொறுப்புகளும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்திஞல் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட கழகத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்.

**10.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனை, கொடை, நன்கொடை அல்லது இறுதிவிருப்பாவனக் கையளிப்பின் பயனாக அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாகும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைகொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையாள உள்ள முழுத் தத்துவத்துடனும் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது நிறைவேற்றுக் குழுவின் இரு உறுப்பினரின் முன்னிலையில் அல்லாமலும் எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது ; அவர்கள் தலைவரரகவும், பொதுச் செயலாளராகவும் அல்லது பொருளாளராகவும், இருத்தல் வேண்டும் ; அவர்கள் சமுகமாயிருந்ததற்குச் சான்ருக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களைக் கையொப்பமிடல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுதலுக்குத் தனி வேருனதாதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேர்களதும் உரிமைகளைப் பேணுதல்.

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரச அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பாதிப்பதாகாது அல்லது தாக்குவதாகாது.

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**1976 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் தேதிய**

**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

**(22. 12. 76 ஆந் தேதியன்று வெளியிடப்பட்டது)**


# நிதி (திருத்தம்)

**1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டமூலம்.**

*நிதி அமைச்சரால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## சட்டப்பயன் பற்றிய கூற்று

வாசகம் 2 : 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தில் 10 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது. இப்பிரிவின் சட்டப்பயனாவது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் தோதான அமைச்சரினால் அவ்வாறு செய்யும்படி அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள் குறித்த சில நட்டங்களைப் பதிவழிப்பதனைத் தடை செய்தலாகும்.

1—எ 23860—6,045 (11/76)

**ச. வ.—ஒ. 26/76**

***1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்***

இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் ஆக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1976 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 10 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், இது அச்சட்டத்தின் 10 அ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:— *1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தில் 10அ எனும் புதிய பிரிவை உட்புகுத்தல்.*

'குறித்த சில நட்டங்களைப் பதிவழித்தல் பற்றிய ஏற்பாடு.

10அ. (1) வேறேதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கவல்லாது, பகிரங்கக் கூட்டுத்தாபனம் எதுவும், அதனால் உறப்பட்ட நட்டம் எதனையும் பதிவழித்தல் ஆகாது.

(2) அத்தகைய கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட நட்டம் எதுவும் பதிவழிக்கப்படல்வேண்டுமென ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆட்சிக்குழு கருதுகின்றவிடத்து, அத்தகைய நட்டம் பற்றிய முழு நிகழ்வுகளையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றினை அதற்கேற்ற தோதான அமைச்சரிடம் சமர்ப்பித்தல் வேணடும்.

(3) தோதான அமைச்சரானவர், (2) ஆம் உட்பிரிவின் கீழ் தமக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்ட நட்டம் பதிவழிக்கப்படல் வேண்டுமெனத் திருத்திப்பட்டால், அவர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அத்தகைய நட்டத்தைப் பதிவழிக்கும்படி கூட்டுத்தாபனத்துக்கு அதிகாரமளிக்கலாம்.

(4) இப்பிரிவில், "நட்டம்" எனும் சொல்லமைப்பு—

(அ) (பணம், மூத்திரைகள், களஞ்சியப்பொருட்கள், கால்நடைகள், பயிர்கள், தாவரங்கள், சீட்டுக்கள் என்பன உட்பட) ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஏதேனும் ஆதனத்துக்கு நேர்ந்த நட்டம் அல்லது விளைந்த சேதம் என்று ;

(ஆ) ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குக் குத்தகைக்கு விடப்பட்ட அல்லது வேறு விதத்தில் ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் உடை

மையிலுள்ள ஏதேனும் ஆதனத்துக்கு நேர்ந்த நட்டம் அல்லது விளைந்த சேதம் என்று ;

(இ) ஏதேனும் மேலதிகக் கொடுப்பனவு என்று அல்லது பிழையான திறத்தவருக்குச் செய்யப்பட்ட ஒரு கொடுப்பனவு என்று ;

(ஈ) அதிகாரமளிக்கப்படாத அல்லது பிழையான ஏதேனும் கொடுப்பனவு என்று;

(உ) ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபன ஊழியர் ஒருவரின் அசட்டையினால், கவனமின்மையால், தாமதத்தால் அல்லது செய்யாமையால் விளைந்த ஏதேனும் நட்டம் தொடர்பில் சேதவீடுகளைச் செலுத்துவதில் உறப்பட்ட ஏதேனும் செலவு என்று ; அல்லது

(ஊ) அறவிடமுடியாததான ஏதேனும் புத்தகக் கடன் என்று

பொருளாகும்.'.